செ.செ. எண்: 706.

நாள்: 01.12.011

# பத்திரிக்கைச் செய்தி

ஆண்டுதோறும் "டிசம்பர் திங்கள் முதல் நாள், உலக எய்ட்ஸ் தினமாக" அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டிற்கான உலக எய்ட்ஸ் தினத்தின் மையக்கருத்து "புதிய எச்.ஐ.வி. தொற்று இல்லாத, புறக்கணித்தல் இல்லாத மற்றும் எய்ட்ஸால் இறப்பில்லாத நிலையை அடைதல்" என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழக அரசின் மேலான ஆதரவோடு, சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம், எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு தகவல்களை அனைவரும் அறிந்திடும் வகையில், சென்னை வாழ் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இது தவிர, சென்னையில் பள்ளிகளில் எய்ட்ஸ் குறித்த தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் வாழ்வியல் திறன் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், எச்.ஐ.வி. குறித்த பாதுகாப்பான வழிகாட்டுதல்களை அனைவருக்கும் வழங்கிட, ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள், எச்.ஐ.வி. தொற்றுள்ளோருக்கான கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் ஆகியவை சென்னையில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி எச்.ஐ.வி./எய்ட்ஸை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களை பரிவுடன் கவனித்துக் கொள்ளவும், புதிய எச்.ஐ.வி. தொற்று இல்லா சமுதாயத்தை உருவாக்கவும் அனைத்து தரப்பினரும் குறிப்பாக நாளைய தலைமுறையினராக மாணவ சமுதாயம் தங்கள் பங்களிப்பினை அளித்திடல் அவசியமாகும்.

எனவே, மாணவர் சமுதாயத்தினை ஊக்கப்படுத்தி அவர்களின் பங்களிப்பினை பெற்றிடும் வகையில் உலக எய்ட்ஸ் தினமான இன்று சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம் கீழ்கண்ட போட்டிகளை அறிவிக்கின்றது:-

| வ. எண் | போட்டியின் பெயர் | விவரம் | தலைப்பு |
|---|---|---|---|
| 1. | குறும்பட போட்டி | <u>பங்குபெறுவோர்</u> : சென்னை கல்லூரிகளின் மாணவர்கள்<br><u>படத்தின் கால அளவு</u> : 30 வினாடிகள் (Spots) மற்றும் 4-5 நிமிடங்கள்<br>பரிசுகள் : முதல் பரிசு ரூ.25,000/-<br>இரண்டாம் பரிசு ரூ.10,000/-<br>மூன்றாம் பரிசு ரூ.5,000/-<br>(ஒவ்வொரு நிலைக்கும் இரு பரிசுகள்)<br>DVD format ல் கீழே காணப்படும் விலாசத்திற்கு 16.01.2012 ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். | எச்.ஐ.வியால் பாதிக்கபட்ட மக்களும் நம்மைப் போன்ற மக்களே (People Living with HIV are also People like us) |
| 2. | விளம்பர வாசகப் போட்டி (Slogan Competition) தமிழ் மற்றும் ஆங்கிலம் | <u>பங்குபெறுவோர்</u> : சென்னை பள்ளி மற்றும் கல்லூரிகளின் மாணவர்கள்<br><u>பரிசுகள்</u> : ரூ.5,000/- முதல் பரிசு(4 பேருக்கு)<br>: ரூ.2,500/- இரண்டாம் பரிசு (4 பேருக்கு)<br>(போட்டியின் வாசகங்கள் இரண்டு வரிகளுக்குள் இருக்க வேண்டும்) வாசகங்கள் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். (வாசகங்கள் 16.01.2011 ஆம் நாளுக்குள் Email மற்றும் கடிதங்கள மூலம் கிடைக்கப் பெற வேண்டும்) Email subject-ல் Slogan Competition **(capacsiec@gmail.com)** என்றும் கடிதத்தின் மேலுறையில் விளம்பர வாசக போட்டி என்றும் குறிப்பிட வேண்டும். | 1. எச்.ஐ.வி எய்ட்ஸ் உள்ளவர்களிடம் காட்டப்படும் பாகுபாட்டினை அழித்தல் (அல்லது) எச்.ஐ.வி எய்ட்ஸ் தடுப்பு<br><br>2. குடும்பம் மற்றும் நல்ல பழக்கங்களின் எச்.ஐ.வி தடுப்பில் பங்களிப்பு |
| 3. | சுவர் ஓவியம் | <u>பங்குபெறுவோர்</u> : சென்னை பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கான இடையிலான போட்டி<br>அளவு : 10 X 10 அடி சுவற்றில் 5 பேர் கொண்ட குழு, இரண்டு மணி நேரத்தில் எய்ட்ஸ் தொடர்பான கருப்பொருளை சார்ந்து ஓவியம் வரைய வேண்டும். போட்டியின் நாள் கலந்து கொள்வோரின் எண்ணிக்கையை பொருத்து பின்னர் அறிவிக்கப்படும்.<br>(போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழ்கண்ட முகவரிக்கு நேரிலோ கடிதம் மூலமோ அல்லது ஈமெயில் மூலமாகவோ 30.12.2011 க்குள் தெரிவிக்க வேண்டும்) | |

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

தகவல் கல்வி பிரிவு, சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்.
**82,** திரு.வி.க. சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004.

<u>தொலைபேசி :</u> 24986514 <u>email Id</u> : capacsiec@gmail.com

2/2.

*வெளியீடு, இயக்குநர்*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*